நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

Nov 8'2015



காஞ்சிபுரம், நவ. 7: காஞ்சிபுரம் மாவட்டத்தில் மின் ஆளுமை திட்டம் குறித்து கல்லூரி மாணவர்கள் அளித்த திட்ட அறிக்கையில் அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி மாணவர்கள் அளித்த திட்ட அறிக்கை முதலிடம் பெற்றது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மின் ஆளுமை திட்டம் குறித்து கல்லூரி மாணவர்களுக்கு இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டும், மாணவர்களை ஊக்குவிப்பதற்காகவும், மாநில, மாவட்ட அளவில் தமிழக முதல்வரின் மின் ஆளுமை விருது 2015-16 -க்கு விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் 27 கல்லூரி மாணவர்களின் திட்ட அறிக்கைகள் விண்ணப்பத்துடன் பெறப்பட்டன. அவற்றில் சிறந்த 3 திட்ட அறிக்கைகள் தேர்வு செய்யப்பட்டன. இதில் காஞ்சிபுரம் அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ. 10 ஆயிரத்துக்கான காசோலை, சான்றிதழ்கள், டி.எம்.ஐ. பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு 2-ஆவது பரிசாக ரூ. 7500-க்கான காசோலை, சான்றிதழ்கள், ஆனந்த் இன்ஸ்டிட்யூட் ஆப் ஹையர் டெக்னாலஜி கல்லூரி மாணவர்களுக்கு 3-ஆவது பரிசாக ரூ. 5 ஆயிரத்துக்கான காசோலை, சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் இரா.கஜலட்சுமி சனிக்கிழமை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் க.சௌரிராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) எம்.பிரியதர்ஷினி, மாவட்ட தகவல் மைய அலுவலர் ஜே.சேகர், காஞ்சிபுரம் வருவாய்க் கோட்ட அலுவலர் கோ.சிவருத்ரைய்யா, மின் மாவட்ட மேலாளர் வி.சரண்யா, தனி வட்டாட்சியர் (வரவேற்பு) டி.ரமேஷ் உள்பட பலர் பங்கேற்றனர்.